# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| அரியலூர் நகராட்சியின் அவசரக்கூட்டம் நிகழும் சுபகிருது வருடம் 13.01.2023ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. | | | |
| 13.01.2023 | 1 | பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2023 | 2 | அரசாணை நிலை எண்.159 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.11.2022ன்படி அரியலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்து சீரான அழுத்தத்துடன் கூடிய குடிநீர் விநியோகம் செய்வதற்கு **அம்ருத் 2.0 திட்டத்தின்** கீழ் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிக்கு ரூ.18.20 கோடிக்கு (GOI Share : Rs.9.10 crore + GOTN Share : Rs.5.46 crore + ULB Share : Rs.3.64 crore) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2023 | 3 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகளின்படி, அரியலூர் நகராட்சி பொறியாளருக்கு Bolero வாகனமும் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி, Bolero வாகனத்தில் Side Foot Step Set இல்லாததால் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனமான மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.Shiva Automobiles Pvt. Ltd., Ariyalur என்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யதிட உத்தேச செலவினம் ரூ.12870/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>குடிநீர், பாதாள சாக்கடை திட்டப்பணிகளை ஆய்வு செய்திடவும் மேலும் தெருவிளக்குகள் மற்றும் திட்டப்பணிகளை ஆய்வு செய்திடவும் மேற்காணும் வாகனத்திற்கான உதிரி பொருட்கள் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று கொள்முதல் செய்யப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2023 | 4 | தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.11.2022 அன்று வருகை தந்ததை முன்னிட்டு துறையூர், பட்டுக்கோட்டை மற்றும் அரியலூர் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நாள்.27.11.2022, 28.11.2022 மற்றும் 29.11.2022 மூன்று நாட்கள் அம்மா உணவகத்தின் மூலம் உணவு வழங்கப்பட்டதற்கான மளிகைபொருட்கள், காய்கறி, வாடகை பாத்திரம், இலை, இறைச்சி மற்றும் முட்டை ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.41,423/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2023 | 5 | மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் அரசு விழாவிற்கு 29.11.2022 அன்று அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு அரியலூர் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நேரடி அறிவுரையின்படி, அரியலூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரத்தினை செய்திதாளில் பிரசுரிக்கப்பட்டதற்கான விளம்பரம் கட்டணம் ரூ.50,242/–னை தினகரன் (KAL PUBLICATIONS (P) LTD) நாளிதழிலுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மேற்காணும் தொகையினை பொது நிதியில் வழங்கலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2023 | 6 | அரியலூர் நகராட்சிக்குட்பட்ட திருச்சி சாலையில் உள்ள பழைய உரக்கிடங்கில் Bio-Mining முறையில் குப்பைகளை (16055 $m^3$) அப்புறப்படுத்தும் பணியில் அண்ணா பல்கலைக்கழகத்தினை மூன்றாம் நபர் ஆய்வுக்குழு நிறுவனமாக (Third Party Verification Agency) அமர்த்திக்கொள்வதற்கான கட்டணம் ரூ.4,72,000/–னை அண்ணா பல்கலை கழகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2023 | 7 | அரியலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் இல்லாத கழிவு நீக்கம் செய்யும் நிலையில் உள்ள காம்பாக்டர் பின், டம்பர் பிளேசர் பின், தள்ளுவண்டி, மோட்டார்கள் டிரான்பார்மர்கள் மற்றும் வாகனங்களை பொதுமக்கள் அறியும் வண்ணம் பொது ஏலத்தில் விடுவதற்காக அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்புதுறையின் மூலம் தினசரி நாளிதழ் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான விளம்பரம் கட்டணமாக ரூ.12,500/–னை தினசெய்தி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>13.01.2023</td><td>8</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2652/2022/எம்.ஏ1, நாள்.16.12.2022ல் நகராட்சிக்கு சொந்தமான காலவதியான வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில், இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட வாகனங்கள் மண்டல துணை இயக்குநர், அரசு தானியங்கிப்பணிமனை, திருச்சி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கழிவு நீக்கம் செய்யப்பட்டு, கழிவுச்சான்று பெறப்பட்டுள்ளது. அவற்றை பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>தயாரிப்பு வகை</th><th>வாகன எண்</th></tr>
<tr><td>1</td><td>Bolero</td><td>TN 46 D 2893</td></tr>
<tr><td>2</td><td>Mahindra Load Kind Super</td><td>TN 46 F 9511</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>9</td><td>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் அரசு விழாவிற்கு 29.11.2022 அன்று அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தருவதால் பேருந்து நிலைய மற்றும் நகரின் முக்கிய சாலைகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தற்காலிக குடிநீர் வசதி அமைப்பு ஏற்படுத்திட மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.எப்2/7297/2022, நாள்.19.10.2022ன்படி அறிவுறுத்தப்பட்டதால், விழா நடைபெறும் இடம், பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் பேருந்து நிலையத்தில் குடிநீர் வசதி ஏற்படுத்திட இந்நகராட்சியில் போதிய சின்டெக்ஸ் தொட்டி இல்லாததால் நகராட்சிகள் விதி 15ன் கீழ் புதியதாக சின்டெக்ஸ் தொட்டி கொள்முதல் செய்யப்பட்டு, அதற்கான பட்டியல் தொகை ரூ.61885/– நவின் டிரேடர்ஸ் அரியலூர் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றம் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>10</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.35132/2022/CFC-1, நாள்.12.10.2022ன்படி, 15வது நிதி ஆணையம் 2022–23ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற சுகாதார நல மையம் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புதுறையின் மூலம் தினசரி நாளிதழ் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான விளம்பரம் கட்டணமாக ரூ.3654/–னை மாலை மலர் செய்தி நாளிதழுக்கு (Malar Publications Limited, Tiruchirapalli) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>11</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட செட்டி ஏரி முதல் சித்தேரி வரை உள்ள வாய்க்காலில் முட்புதர் மற்றும் செடிகொடிகள் வளர்ந்துள்ளதால், மழைநீர் செல்லாமல் செல்லாமல் தேங்கி பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு விளையும் நிலையில் உள்ளதால், Hitachi இயந்திரம் மூலம் ரூ.3.00 இலட்சத்திற்கு தூர்வாருவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.137, நாள்.31.10.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் 18.11.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.ராமலிங்கம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட 0.27 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை</td><td>மதிப்பீட்டை விட 1.75 சதவீதம் குறைவு</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ராமலிங்கம், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 0.27% குறைவாகவும், M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 1.75% குறைவாகவும் கொடுத்துள்ளனர். எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட மிக குறைவாக கொடுத்த M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு<br>மேற்காணும் பணி பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மற்றும் பொது சுகாதாரப்பணி என்பதாலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>12</td><td>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் நுண்ணிய கலவை உரக்கிடங்கில் கசிவு நீர்த்தொட்டி ரூ.42,000/–த்திற்கு அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.103, நாள்.17.08.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின் படி, 18.11.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.ராமலிங்கம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட 1.45 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை</td><td>மதிப்பீட்டை விட 0.10 சதவீதம் குறைவு</td></tr>
</table></td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ராமலிங்கம், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 1.45% குறைவாகவும், M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 0.10% குறைவாகவும் கொடுத்துள்ளனர். எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட மிக குறைவாக கொடுத்த திரு.ராமலிங்கம், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>13.01.2023</td><td>13</td><td>அரசாணையின்படி, அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை வளாகத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–22 கீழ் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டிடம் கட்டும் பணிக்கான திட்டமதிப்பீடு ரூ.115.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி கட்டிடத்திற்கு வடிவமைப்பு கட்டணமாக ரூ.1,20,000/– னை அண்ணா பல்கலைகழகம், அரியலூர் என்ற கல்வி நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>14</td><td>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான இருசுக்குட்டை நீர்நிலையில் நீர்வரத்து (inlet) மற்றும் நீர் வெளியேறும் (Outlet) பகுதியில் AC Pipe அமைக்க ரூ.2.50 இலட்சத்திற்கு அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.132, நாள்.31.10.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 18.11.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை</td><td>மதிப்பீட்டை விட 1.70 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ராமலிங்கம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட 0.62 சதவீதம் குறைவு</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 1.70% குறைவாகவும், திரு.ராமலிங்கம், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 0.62% குறைவாகவும் கொடுத்துள்ளனர். எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட மிக குறைவாக கொடுத்த M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>15</td><td>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான திருச்சி சாலையிலில் உள்ள பாதாள சாக்கடை நீரேற்று நிலையத்திலிருந்து உந்தப்பட்டு கீழப்பழுவூரில் உள்ள பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் பிரதான கழிவுநீர் குழாய் மற்றும் மருதையாற்றின் குறுக்கே அமைந்துள்ள பிரதான கழிவுநீர் குழாயினை தாங்கு பாலத்தில் பழுது ஏற்பட்டதை ரூ.3.75 இலட்சத்திற்கு சரி செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.125, நாள்.31.10.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 18.11.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.ராமலிங்கம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட 1.85 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை</td><td>மதிப்பீட்டை விட 0.75 சதவீதம் குறைவு</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ராமலிங்கம், அரியலூர் என்பவர் மதிப்பீட்டை விட 1.85% குறைவாகவும், M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன், நல்லறிக்கை என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 0.75%குறைவாகவும் கொடுத்துள்ளனர். எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட மிக குறைவாக கொடுத்த திரு.ராமலிங்கம், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>16</td><td>அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சிக்குட்ப்பட்ட 18 வார்டுகளிலும் வீடு வீடாக சென்று டெங்கு கொசு உற்பத்தியாலும் கலன்களை அழித்தல், டெங்கு நோய் ஏற்பட்டவர்களை மருத்துவ முகாம்களுக்கு அனுப்பிவைத்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல் மற்றும் துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தல் ஆகிய பணிகளை சிறப்பு கவிக்குயில் மகளிர் சுய உதவிக்குழு கணக்கெடுப்பாளர்களை கொண்டு மாவட்ட ஆட்சியர், அரியலூர் அவர்களின் ஊதிய விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சம் மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>17</td><td>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு TN 61 E 9532 வாகனத்தில் பொதுமக்கள் அறியும் வண்ணம் ஒலிபெருக்கியின் மூலம் வரி வசூல் குறித்த விளம்பரம் செய்திட ஏதுவாக புதிய பேட்டரி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள 06.01.2023 அன்று பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>பாலாஜி பேட்டரி ஒர்க்ஸ், அரியலூர்</th><th>R.மாதவன், அரியலூர்</th><th>ஸ்ரீலட்சுமி பேட்டரி ஹவுஸ், அரியலூர்</th></tr>
<tr><td>1</td><td>பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு TN 61 E 9532 வாகனத்தில் ஒலிபெருக்கியின் மூலம் விளம்பரம் செய்வதற்காக புதிய பேட்டரி அமைத்தல்</td><td>ரூ.13,125/–</td><td>ரூ.12,225/–</td><td>ரூ.13,715/–</td></tr>
</table>
மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்த R.மாதவன், அரியலூர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>13.01.2023</td><td>18</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்களிலும் உள்ள அனைத்து சமுதாய மற்றும் பொதுகழிவறைகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பொதுமக்கள் தடையின்றி பயன்படுத்த ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>19</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17021–1/2021/EA–1, நாள்.14.12.2021 ன்படி, அரியலூர் நகராட்சியில் மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதி 2021–22 கீழ் ரூ.43.80 இலட்சம் மதிப்பீட்டில் Supply, Erection and Commissioning of Online Continuous Effluent Monitoring Station (OCEMS) for measurement of BOD, COD TSS, PH and Flow meter for 4.16MLD STP (Keelapalur Village) அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி, 18.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட உரிய நடைமுறைகளின்படி மதிப்பீட்டை விட 0.08 சதவீதம் குறைவாக கொடுத்த M/s.RL Technologies Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>20</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேல அக்ரஹாரம் தெருவில் புல எண்.556/4ல் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்கள்.O.S.NO.382/10 வழக்குக்கு வழக்காடும் கட்டணம் ரூ.15000/–ஐ அரசு வழக்கறிஞர் திரு.து.கணேசன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
அனுமதி வழங்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13.01.2023</td><td>21</td><td>நகராட்சியின் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2023 முதல் 31.03.2026 வரை மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏல இனத்தின் விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலப்பொறுப்பு தொகை தனித்தனியாக</th><th>சொத்து மதிப்பு சான்றிதழ் 01.01.2023க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும்</th><th>சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை</th></tr>
<tr><td>1</td><td>நகராட்சி பழைய அலுவலக கட்டிடம்</td><td>ரூ.17,00,000/–</td><td>ரூ.25,00,000/–</td><td>ரூ.17,00,000/–</td></tr>
<tr><td>2</td><td>அரியலூர் நகர எல்லைக்குள் நுழையும் சரக்கு வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>ரூ.10,00,000/–</td><td>ரூ.10,00,000/–</td><td>ரூ.5,00,000/–</td></tr>
<tr><td>3</td><td>தினசரி மார்க்கெட்டில் உள்ள கட்டணக்கழிவறை வசூல் செய்யும் உரிமம்</td><td>ரூ.2,00,000/–</td><td>ரூ.2,00,000/–</td><td>ரூ.2,00,000/–</td></tr>
<tr><td>4</td><td>தினசரி காந்தி மார்க்கெட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.04</td><td>ரூ.50,000/–</td><td>ரூ.1,00,000/–</td><td>ரூ.50,000/–</td></tr>
</table></td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>5</td><td>தினசரி காந்தி மார்க்கெட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.06</td><td>ரூ.50,000/–</td><td>ரூ.1,00,000/–</td><td>ரூ.50,000/–</td></tr>
<tr><td>6</td><td>தினசரி காந்தி மார்க்கெட் கடை எண்.19</td><td>ரூ.50,000/–</td><td>ரூ.1,00,000/–</td><td>ரூ.50,000/–</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தைகள் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
மேற்கண்டுள்ள குத்தகை இனங்கள் பொது ஏலத்தில் விடுவதற்கு தினசரி நாளிதழில் ஒரு நாள் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>13.01.2023</td>
<td>22</td>
<td>அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரமாக மாற்றும் நுண் உரமாக்கும் மையத்தில் உள்ள இயந்தரம் பழுதடைந்துள்ளதை, பழுதுநீக்கம் பணி செய்திட ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொது சுகாதார பணியோடு தொடர்புடையது என்பதால், மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>13.01.2023</td>
<td>23</td>
<td>அரசாணை நிலை எண்.23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.12.2022ன்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் (KNMT) 2022-23 கீழ் அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 சர்வே எண்.602/3ல் புதிய வாரச்சந்தை கட்டும் பணிக்கு ரூ.1.18 கோடிக்கு (KNMT Share : 0.83 crore + ULB Share : 0.35 crore) நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி, 23.12.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.பன்னீர்செல்வம், அரியலூர்</td><td>மதிப்பீட்டை விட 0.29 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>M/s.ஸ்ருதி இன்ஜினியரிங், Z.களத்தூர்</td><td>மதிப்பீட்டை விட 0.01 சதவீதம் குறைவு</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பன்னீர்செல்வம், அரியலூர் என்பவர் நிறுவனம் மதிப்பீட்டை விட 0.29% அதிகமாகவும், M/s.ஸ்ருதி இன்ஜினியரிங், Z.களத்தூர் என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 0.01% குறைவாகவும் கொடுத்துள்ளனர். எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த M/s.ஸ்ருதி இன்ஜினியரிங், Z.களத்தூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தொடர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>13.01.2023</td>
<td>24</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.9512/2022/SBM-1, நாள்.20.06.2022ன்படி, தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம் 2.0)ன் கீழ் அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான திருச்சி சாலையில் உள்ள உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள மரபுக்கழிவுகளை (Legacy Waste) Bio Mining மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.114.85 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி, 23.12.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>M/s Gorantla Geosynthetics Pvt Ltd, Chennai</td><td>மதிப்பீட்டை விட 3.50 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>M/s. Jathin Infra Pvt Limited, Bangalore</td><td>மதிப்பீட்டை விட 13.78 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Gorantla Geosynthetics Pvt Ltd, Chennai என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 8.83% அதிகமாகவும், M/s. Jathin Infra Pvt Limited, Bangalore என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 13.78% அதிகமாகவும் கொடுத்துள்ளனர். எனவே, இவற்றில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி குறைத்து கொடுக்க இந்நகராட்சியின் மூலம் விலை குறைப்பு கடிதம் 24.08.2022 அன்று அனுப்பப்பட்டதின் அடிப்படையில், M/s Gorantla Geosynthetics Pvt Ltd, Chennai என்ற நிறுவனம் மதிப்பீட்டை விட 0.22% குறைவாக கொடுத்துள்ளார். எனவே, மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த M/s Gorantla Geosynthetics Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி தொடர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>13.01.2023</td>
<td>25</td>
<td>அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி , ஊராட்சி ஒன்றிய துவக்கபள்ளி (மேற்கு) மற்றும் அரியலூர் ஊராட்சி ஒன்றிய துவக்கபள்ளி (கிழக்கு) ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் ஆண்டு தேர்வுகளுக்கு தயாராவது, போட்டி தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் வழங்குவது மற்றும் மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் விதமாக மாணவர்கள் பயனுறும் வகையில் தினகரன் தினசரி நாளிதழில் ஜனவரி–2022, பிப்ரவரி–2022</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் மார்ச்–2022 ஆகிய மாதம் வரை பிரசுரம் செய்து (சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து) சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5000/–க்கு (ஐயாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 13.01.2023 | 26 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்திரவு ந.கஎ.ண 2080/2021/UPA நாள். 07.10.2022ன்படி, அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10ல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் தங்கி உள்ள நகர்ப்புற வீடற்ற ஏழைகளுக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திடவும், அவர்களுக்கு மருத்துவ முகாம் ஏற்படுத்தி மருத்துவ சிகிச்சைகள் வழங்கிடவும், காலை, மாலை, இரவு என மூன்று வேளைகளிலும் உணவு வழங்கிடவும், டீ, பிஸ்கட், சிற்றுண்டி வழங்குதல், அவர்கள் இருக்கும் இடத்தினை சுற்றி கூட்டு துப்புரவு செய்தல், கட்டிடத்தினை மின்விளக்குகளால் அலங்கரித்தல், இதுதொடர்பாக பொதுமக்களுக்கு நோட்டீஸ் வழங்கி விழிப்புணர்வு வழங்குதல் போன்ற நிகழ்வு செய்ய உத்தரவு பெறப்பட்டது. அதன்படி கடந்த 10.10.2022 அன்று பணிகள் மேற்கண்ட பணிகள் அனைத்தும் செய்து முடிக்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.40,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதார பணி என்பதாலும், பொதுமக்கள் நலன்கருதியும், மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதையும் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 13.01.2023 | 27 | தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் நகராட்சியில் விரைவில் செயல்படுத்த உள்ளதால், அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய கட்டுபாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகளான அரியலூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி (மேற்கு) மற்றும் அரியலூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி (கிழக்கு) ஆகிய பள்ளிகளை அரியலூர் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய அரியலூர் ஊராட்சி ஒன்றிய கூட்ட மன்றத்தில் தீர்மானம் எண்.130 நாள்.18.11.2022ல் அங்கீகரித்துள்ளது. மேற்படி, பள்ளிகளை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள உதவி இயக்குநர் (ஊ/த) மாவட்ட ஆட்சியரம், அரியலூர் அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி உள்ளது. எனவே மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப் பட்டது |